கணபதிதுணை.

பெரியஅரிச்சுவடி.

பாலபோதம்

ஆத்திசூடி, கொன்றைவேந்தன்,
நீதிக்கற்பனைகள், கதாமஞ்சரி, உலகநீதி
அடங்கியுள்ளன.



. கோபாலகிருஷ்ணக் கோன்,
ஷாப், வடக்குச்சித்திரை வீதி,
மதுரை.

ிலை] 1932. [அணா 2.

எக்ஸெல்ஸியர் பிரஸ், மதுரை.



இங்கிலீஷ் எழுத்துக்கள்

A B C D E F G H I J
K L M N O P Q R S
T U V W X Y Z.

a b c d e f g h i j
k l m n o p q r s
t u v w x y

இங்கிலீஷ் எண்கள்.

1 2 3 4 5 6 7 8 9

தமிழ் எண்கள்.

௧ ௨ ௩ ௪ ௫ ௬ ௭ ௮ ௯ ௰ ௱ ௲.

உ

கணபதிதுணை.

பெரிய அரிச்சுவடி.

ஹரிவோம் நன்ருக
குருவாழ்க குருவே துணை.
விநாயகர் காப்பு.

அகத்தியமா முனியருளா லருந்தமிழா லரிச்சுவடி
ஜெகத்திற்பிர காசமுடன்செப்பவே-மிகுத்தெனக்கு
வாராவெழுத் தெல்லாம் வரவே வரந்தருவாய்
காராய் கணபதியே காப்பு.

ஹரி நமோத்து
சி ந் த ம்.

உயிர் எழுத்து 12.

அ ஆ இ ஈ உ ஊ எ
ஏ ஐ ஒ ஓ ஔ {கூ௰௨

மெய் எழுத்து 18.

க் ங் ச் ஞ் ட் ண் த்
ந் ப் ம் ய் ர் ல் வ்
ழ் ள் ற் ன்

உயிர்மெய்யெழுத்துக்கள்

க ங ச ஞ ட ண

த ந ப ம ய ர ல

வ ழ ள ற ன

வடமொழி எழுத்துக்கள் 5.

ஜ ஸ ஷ ஹ க்ஷ

இந்த 5 ம் குறில்.

அ இ உ எ ஒ

இந்த 7-ம் நெடில்.

ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ

இந்த 6-ம் வல்லினம்.

க ச ட த ப ற

இந்த 6-ம் மெல்லினம்.

ங ஞ ண ந ம ன

இந்த 6-ம் இடையினம்.

ய ர ல வ ழ ள

குறில்	அ	க	ங
நெடில்	ஆ	கா	ஙா
குறில்	இ	கி	ஙி
நெடில்	ஈ	கீ	ஙீ
குறில்	உ	கு	ஙு
நெடில்	ஊ	கூ	ஙூ
குறில்	எ	கெ	ஙெ
நெடில்	ஏ	கே	ஙே
குறில்	ஐ	கை	ஙை
நெடில்	ஒ	கொ	ஙொ
குறில்	ஓ	கோ	ஙோ
நெடில்	ஔ	கௌ	ஙௌ
ஆயுதம்	ஃ	க்	ங்

உயிர்மெய் எழுத்துக்கள்.

ச	ஞ	ட	ண
சா	ஞா	டா	ணா
சி	ஞி	டி	ணி
சீ	ஞீ	டீ	ணீ
சு	ஞு	டு	ணு
சூ	ஞூ	டூ	ணூ
செ	ஞெ	டெ	ணெ
சே	ஞே	டே	ணே
சை	ஞை	டை	ணை
சொ	ஞொ	டொ	ணொ
சோ	ஞோ	டோ	ணோ
சௌ	ஞௌ	டௌ	ணௌ
ச்	ஞ்	ட்	ண்

த	ந	ப	ம
தா	நா	பா	மா
தி	நி	பி	மி
தீ	நீ	பீ	மீ
து	நு	பு	மு
தூ	நூ	பூ	மூ
தெ	நெ	பெ	மெ
தே	நே	பே	மே
தை	நை	பை	மை
தொ	நொ	பொ	மொ
தோ	நோ	போ	மோ
தௌ	நௌ	பௌ	மௌ
த்	ந்	ப்	ம்

உயிர்மெய் எழுத்துக்கள்.

ய	ர	ல	வ
யா	ரா	லா	வா
யி	ரி	லி	வி
யீ	ரீ	லீ	வீ
யு	ரு	லு	வு
யூ	ரூ	லூ	வூ
யெ	ரெ	லெ	வெ
யே	ரே	லே	வே
யை	ரை	லை	வை
யொ	ரொ	லொ	வொ
யோ	ரோ	லோ	வோ
யௌ	ரௌ	லௌ	வௌ
ய்	ர்	ல்	வ்

ழ	ள	ற	ன
ழா	ளா	றா	னா
ழி	ளி	றி	னி
ழீ	ளீ	றீ	னீ
ழு	ளு	று	னு
ழூ	ளூ	றூ	னூ
ழெ	ளெ	றெ	னெ
ழே	ளே	றே	னே
ழை	ளை	றை	னை
ழொ	ளொ	றொ	னொ
ழோ	ளோ	றோ	னோ
ழௌ	ளௌ	றௌ	னௌ
ழ்	ள்	ற்	ன்

கடவுள் துணை.

இரண்டெழுத்து மொழித்தொடர்.

அரி	ஏணி	கைதி
அரை	ஐயா	கொடு
அடை	ஒரு	கோது
அணை	ஓலை	கௌவு
ஆறு	ஓடு	சமை
ஆடை	கண்	சார்
இசை	கலி	சிரை
இடி	கால்	சீலை
ஈடு	காது	சுமை
ஈகை	கிளை	சூது
உண்	கில்	செல்
உளை	குரு	சேதி
ஊடு	கூர்	தாடி
ஊண்	கூழ்	திரை
எவை	கெதி	தேள்
எலி	கேடு	தொடு
ஏது	கேள்	நினை

நீவா	புதை	மீன்
நாறு	பூனை	முறி
நெய்	பெண்	மூளை
நேர்	பேதை	மெது
நொடி	பைசா	மேனி
நோய்	பொன்	மொழி
பரி	போடு	வழி
பாடு	மணி	வாது
பிணை	மாடு	விடு
பீடை	மிதி	வேசி

மூன்றெழுத்து மொழித்தொடர்.

அரன்	ஒப்பு	சீமான்
ஆலம்	ஓணான்	சுண்டு
இவள்	கண்டி	சூலம்
ஈசன்	காமன்	தம்பி
உலகு	கிணறு	தானன்
ஊத்தை	கீதம்	திருடி
எங்கு	சண்டை	தீரம்
ஏவல்	சாமம்	நலம்
ஐயம்	சிங்கு	நாக்கு

நிறுவை	பீடம்	முச்சி
நீலம்	மதனி	வஞ்சி
பழனி	மாணம்	வாதன்
பாலன்	மிஞ்சு	விதவை
பிண்டி	மீனன்	வீணன்

நான்கெழுத்து மொழித்தொடர்

அய்யர்	கிழவர்
ஆத்தாள்	கீர்த்தி
இடையன்	குயவர்
ஈசுரன்	கெந்தம்
உள்ளூர்	நைடதம்
ஊக்கம்	கொல்லர்
எறும்பு	சங்கிலி
ஏங்கல்	சாக்காடு
ஐந்தூர்	சித்தர்
ஒட்டர்	தருமம்
ஓதுவார்	நயனம்
ஔவையார்	பரமன்
கண்ணான்	மதுரம்
காற்றுடி	வண்ணான்

கடவுள் துணை.

அசைச் சொற்கள்.

அகம்	அத்தான்	அனல்	ஆதி
அகழ்	அத்தி	அனை	ஆத்தாள்
அக்காள்	அப்பம்	ஆகம்	ஆந்தை
அக்குள்	அப்பா	ஆக்கை	ஆப்பு
அங்கி	அப்பி	ஆசான்	ஆமை
அங்குசம்	அம்பு	ஆசை	ஆயம்
அசல்	அம்மான்	ஆஞான்	ஆயன்
அசை	அம்மாள்	ஆடம்	ஆயாள்
அச்சம்	அம்மி	ஆடல்	ஆயி
அஞ்சு	அம்மை	ஆடி	ஆச்சி
அடை	அயம்	ஆடு	ஆரம்
அட்டை	அரம்	ஆடை	ஆரால்
அட்டி	அரன்	ஆட்டை	ஆரை
அணா	அரி	ஆட்சி	ஆலம்
அணி	அரை	ஆட்டம்	ஆலி
அணு	அலை	ஆட்டு	ஆலை
அணை	அலி	ஆணம்	ஆப்பு
அண்டம்	அவள்	ஆணி	ஆச்சு
அண்டை	அவன்	ஆணு	ஆக்கல்
அண்ணர்	அனம்	ஆணை	இகம்
அண்ணி	அள்ளு	ஆண்டி	இங்கி
அதம்	அறம்	ஆண்டை	இங்கு
அது	அறை	ஆண்மை	இச்சை

அசைச்சொற்கள்.

இடம்	ஈகம்	எது	ஐயர்
இடை	உகம்	எத்தன்	ஒட்டன்
இணை	உங்கள்	எத்து	ஒட்டு
இண்டு	உச்சம்	எய்த்து	ஒட்டை
இடி	உடல்	எரி	ஒண்டி
இம்மை	உடை	எரு	ஒண்டை
இது	உணி	எலி	ஒண்ணு
இராகு	உண்ணு	எல்லை	ஒந்தி
இருள்	உதை	எல்லு	ஒப்பம்
இலை	உப்பல்	எல்லன்	ஒப்பு
இல்லை	உப்பு	எல்லி	ஒன்று
இவள்	உமி	ஏகம்	ஒன்றை
இழை	உயிர்	ஏக்கல்	ஓசை
இருல்	உரல்	ஏங்கல்	ஓஞ்சை
இறை	உறி	ஏச்சு	ஓட்டம்
இனம்	உன்ன	ஏடு	ஓட்டான்
இறும்	உண்டை	ஏட்டி	ஓட்டி
இன்பம்	உன்னை	ஏணி	ஓட்டேன்
இன்று	ஊசல்	ஏணை	ஓட்டை
இண்டை	ஊசி	ஏது	ஓணான்
இட்டை	ஊஞ்சல்	ஏப்பம்	ஓலை
இட்டம்	ஊத்தை	ஏம்பு	ஔவை
இருப்பர்	ஊமை	ஏரி	கக்கம்
ஈகை	ஊனம்	ஏரு	கக்கு
ஈரல்	எங்கே	ஏனம்	கங்கு
ஈச்சம்	எச்சல்	ஐந்து	கசம்
ஈட்டி	எடில்	ஐயம்	கச்சை
ஈரம்	எட்டு	ஐயா	கச்சா
ஈனன்	எண்ணு	ஐயன்	கடல்

கட்டை	களி	கிளா	குரல்
கட்டம்	களை	கிளி	குரு
கட்டி	காக்காய்	கிளை	குறில்
கணை	காயம்	கிள்ளு	குன்று
கண்டம்	காசு	கிறு	கூசல்
கதிர்	காஞ்சி	கின்னி	கூச்சு
கதை	காடி	கின்னன்	கூடு
கத்தி	காடை	கின்னை	கூட்டாய்
கத்தை	காட்சி	கீசான்	கூட்டு
கம்பம்	காணி	கீதம்	கூத்தி
கம்மில்	காண்டம்	கீர்த்தி	கூலி
கயம்	காதம்	கீழோர்	கூரை
கரி	காது	கீழ்மை	கூரல்
கரு	காந்தல்	கீறல்	கூனன்
கரை	காப்பு	கீற்று	கெங்கை
கர்த்தன்	காமம்	குகை	கெசம்
கர்ப்பம்	காம்பு	குக்கல்	கெச்சை
கலம்	காசி	குச்சு	கெஞ்சம்
கலன்	காய்ச்சல்	குஞ்சு	கெட்டி
கல்வி	காரை	குடை	கெடு
கலை	காலம்	குட்டி	கெதி
கல்லு	காளம்	குண்டம்	கெதை
கல்லான்	கானல்	குண்டு	கெந்தம்
கற்றை	கிண்டம்	குதிர்	கெப்பை
கல்லை	கிண்ணி	குத்தி	கெம்பு
கவி	கிரை	குப்பம்	கெவி
கவை	கிலி	குமிழ்	கேடு
கழி	கிழம்	கும்பல்	கேட்டை
கழு	கிழி	கும்மி	கேணி

அசைச்சொற்கள்

கேது	கோணு	சாட்டு	சித்தம்
கேழ்வு	கோதை	சாணம்	சித்தி
கேள்வி	கோந்தி	சாணான்	சிந்து
கைவை	கோபம்	சாணி	சிப்பாய்
வைகை	கோபி	சாணு	சிப்பி
கைதா	கோப்பு	சாணை	சிமிள்
கைதி	கோரம்	சாதா	சினை
கொக்கு	கோரை	சாதி	சீட்டு
கொடி	கோர்வை	சாது	சீதா
கொடை	கோலம்	சாந்தி	சீதை
கொடு	கோவை	சாந்தம்	சீந்தி
கொட்டி	கோழி	சாபம்	சீந்தல்
கொதி	கோளை	சாப்பு	சீப்பி
கொத்து	சரி	சாமம்	சீப்பு
கொப்பு	சலம்	சாமி	சீரில்
கொய்யா	சலி	சாமை	சீயம்
கொழு	சவா	சாம்பல்	சீசை
கொலை	சள்ளு	சாயம்	சீரின்
கொல்லு	சள்ளல்	சாயி	சீலம்
கொள்ளு	சனி	சாரம்	சீலி
கொள்ளை	சன்னி	சாரை	சீலை
கொசு	சன்னு	சாலம்	சீவில்
கொச்சை	சன்னம்	சாலி	சீறு
கோடி	சன்னல்	சாலை	சீனி
கோடு	சாகை	சாறு	சீனன்
கோடை	சாக்கு	சாவி	சுகம்
கோட்டி	சாடி	சிக்கு	சுகர்
கோணம்	சாடை	சிங்கம்	சுக்கல்
கோணி	சாட்டி	சிசு	சுக்கு

சுங்கம்	சூட்டி	சேலை	டாலு
சுசி	சூட்டு	சேவல்	டேகை
சுடர்	சூதம்	சேவை	டேரா
சுட்டி	சூது	சேற்றை	தக்கை
சுனை	சூரி	சேனை	தங்கம்
சுண்டு	சூலம்	சைகை	தச்சன்
சுண்டை	சூலி	சைவம்	தடி
சுண்டல்	சூலை	சைனம்	தணல்
சுதி	சூளை	சொகுசு	தண்டு
சுத்தம்	சூறை	சொக்கம்	தந்தி
சுத்தி	செகம்	சொத்து	தயிர்
சுபம்	செக்கு	சொந்தம்	தலை
சுப்பம்	செச்சை	சொர்னம்	தாங்கல்
சுப்பி	செதிள்	சொல்லு	தாங்கி
சுமை	செத்தை	சொற்கம்	தாதி
சுபம்	செந்தில்	சோகை	திகழ்
சுரம்	செந்து	சோதி	திக்கு
சுரி	செபம்	சோம்பல்	திங்கள்
சுருதி	செப்பு	சோர்வு	திசை
சுழி	செம்பு	சோலி	திடம்
சுளி	செல்வம்	சோலை	தீட்டு
சுளுவு	சென்னி	சோளம்	தீண்ட
சுளை	செவி	சோனை	தீபம்
சுறு	சேதி	சோபம்	துக்கம்
சுணை	சேந்தல்	ஞாயம்	துணி
சுன்னம்	சேமம்	ஞானம்	துணை
சூடம்	சேம்பு	டப்பீ	துண்டு
சூடல்	சேரி	டப்பு	தூதன்
சூடு	சேர்வை	டாப்பு	தூபம்

தாரம்	நாட்டம்	படி	பேத்தி
தெங்கு	நாட்டு	படை	பேறு
தெப்பம்	நிசம்	பண்டம்	பொடி
தெப்பல்	நித்தம்	பண்ணை	பொட்டு
தெய்வம்	நிலம்	பனி	பொம்மை
தெற்கு	நிலை	பன்றி	போகம்
தேகம்	நீங்கள்	பாக்கு	போக்கு
தேக்கு	நீதி	பாங்கு	போனு
தேங்காய்	நீலம்	பாச்சல்	மகள்
தையல்	நுங்கு	பாலு	மகன்
தொகை	நுட்பம்	பானை	மக்கள்
தொங்கல்	நுமல்	பிகு	மப்பு
தொட்டி	நூற்று	பிச்சை	மழை
தொட்டு	நூறு	பிட்டு	மாசம்
தொப்புள்	நெஞ்சு	பித்தன்	மாது
தொப்பை	நெல்லு	பீங்கான்	மாடு
தோகை	நெற்றி	புலி	மாற்றான்
தோட்டம்	நேசம்	புகை	மிக்க
தோண்டி	நேத்தி	புன்னை	மீசை
நகம்	நைந்து	பூசை	மீட்சி
நகல்	நைந்தல்	பூச்சி	மீனம்
நஞ்சு	நொக்கல்	பூமி	முகம்
நட்பு	நொச்சி	பூனை	முண்டை
நண்பு	நொள்ளை	பெட்டி	முத்தல்
நதி	நோக்கம்	பெண்டிர்	முனி
நரி	நோன்பு	பெற்று	மூங்கில்
நன்றி	பகல்	பேச்சு	மூளை
நாக்கு	பச்சை	பேடி	மெத்தை
நாசி	பஞ்சு	பேரன்	மெய்மை

மேகம்	யோகி	லங்கர்	வாய்
மேரு	யோசனை	லஞ்சம்	வாதம்
மேடை	ரசம்	லாந்தர்	வாதி
மைந்தன்	ரணம்	லாபம்	வாந்தி
மொக்கு	ராகு	லிங்கம்	விடை
மொந்தை	ராசன்	லீலை	விதம்
மோடி	ருசி	லூட்டு	வீக்கம்
மோரா	ரூபம்	லூட்டி	வீசல்
மௌனம்	ரெப்பை	லேஞ்சி	வெடி
மௌனி	ரேகை	லொக்கு	வெட்டு
யாகம்	ரொக்கம்	லோகம்	வேகம்
யாளி	ரொணம்	லோபி	வேங்கை
யுகம்	ரோகம்	வங்கு	வேட்டி
யுத்தம்	ரோந்தை	வசை	வேட்டு
யூகி	ரோமம்	வஞ்சம்	வைப்பு
யூகை	லக்கம்	வட்டி	வையம்

அசைச்சொற்கள் முற்றிற்று.



இருச்சொல் வாக்கியங்கள்.

வட்டப்பாறை
வந்து செய்தான்
இராஜ நீதி
வாரா மாடு
பூலாக் கொம்பு
சொல்லச் சொன்னார்
கருடப் பட்சி
ஆலம் விதை
எதிர் காலம்
மூன்று கண்கள்
கதிர் காலம்
பொன் மயில்
வள்ளித் தண்டை
என் செய்வான்
கெட்ட கேடு
சோம்பல் வேலை
சாந்த குணம்
கொண்ட மாடு
சீமைக் கம்மல்
பொன் கம்மல்
பசுங் கன்று
நுரைச் செடி
தாணிச் சோளம்
பனை மரம்
வல் விடும்பன்
கொள்ளப்போனான்
நிகழ் காலம்

பொல்லாச் சீமை
வெள்ளைச் சட்டை
செய்தால் நன்று
கந்தைத் துணி
நச்சு வேலை
மச்சு வீடு
போவானேன்
உண்டு வளர்ந்தான்
நையிற் கொடு
ஆட்டைத் திருடி
பட்ட பாடு
சாகுங் காலம்
பலா மரம்
களாச் செடி
பட்டி மாடு
கொடாப் பணம்
செல்லாக் காசு
சிறு குளம்
சீட்டு எழுது
மெத்த யானை
பெருங் குளம்
வெந்த கொள்ளு
விட நாகம்
நல்ல குணம்
சின்னப் பையன்
சுக்குத் துண்டு
வாழைக் குலை

கப்ப மஞ்சள்
வெந்த சோறு
விளா மரம்
பஞ்சு மெத்தை
பாவற் கொடி
பாக்கு மரம்
தண்ணீர் மொள்ளு
நல்ல பாம்பு.
சொம்பைத் துலக்கு
மயில் வாகனம்
பிரம தேவன்
பரம சிவன்
நல்ல பையன்
பாடம் படி
பச்சை ஓணான்
அரிசி மூட்டை

இருச்சொல் வாக்கியங்கள் முற்றிற்று.

முச்சொல் வாக்கியங்கள்.

சிவனை மறவா திரு
நீ சொல்லாப் பேச்சு
கொள்ளு தின்னு மாடு
அந்த வெள்ளை நாய்
இந்த பொற் சுமை
நீ இந்தப் படி
நீர் அதைக் கேளும்
நான் என்ன செய்வேன்
நா மங்கே போவோம்
அவர் என்ன செய்வார்
அந்த மூடப் பையன்
நீ சொன்ன வார்த்தை
ஒரு சீந்திற் கொடி
ஊரி வில்லாப் பொருள்
மேயப் போன பசு
மெத்த நல்ல பெண்
ஒரு நாட்டு மாடு
ஒரு நல்ல பாம்பு
மூன்று ஆடு நொண்டி
சுவாமி கிருபை யுண்டு
நீ அங்கே போ
நான் வந்து போவேன்
சிற்பி வேலை செய்தான்
தச்சன் வேலை பாரும்
இது நல்ல வேளை
நல்ல வசனம் கேளும்
தாசி தேடி வந்தாள்
நல்ல வழியில் நட
அந்தப் புஷ்ப மெடு
வாச முள்ள மலர்

ஒரு ஏழை மனிதன்
கேட்டு வந்து சொல்
அவன் அங்கு போனான்
அந்த எரிக் கால்
இந்தக் கடன் சீட்டு
நீ அதைச் செய்
இது கெட்ட ஜன்னி
ஒரு வெள்ளைச் சாவல்
கால மல்லாக் காலம்
நீ அதை எடு
ஒரு போல் முத்து
வெகு கெட்ட மனிதன்
ஒரு பெரிய கோவில்
சித்திர வேலைக் காரன்
அட்ட திக்குப் பாலகர்
நல்ல தம்பி எங்கே
இங்கே வரக் காணோம்
அங்கு சென்றார் அவர்
ஜவுளி வாங்கி வா
தாவணி ஒன்று வாங்கு
இந்த சிறு தாவணி
அந்த மந்தைக் காகும்
அழுத்த முள்ள துணி
பத்து முழ உடை
ஒரு நந்த வனம்
புஷ்பச் செடி யுண்டா
உங்கே அதிக முண்டு
என்ன என்ன செடி
மல்லிகை முல்லை மரு
இத்தனை வகை இருக்க
ஆறு லதைப் பறி
குடலை நிறம்ப எடு
நார் கிழித்து முடி
பூவை எல்லாங் கட்டு
குடலையிற் கட்டி வை
சுவாமிக்கு பூச் சூடு
தரிசனை பண்ணி வா
சகல பிணியும் நீங்கும்
சஞ்சலப் படல் ஏன்
என் தாய் தந்தை
இந்த ரண சூரன்
பாய வார புலி.

முச்சொல் வாக்கியங்கள் முற்றிற்று.

நாற்சொல் வாக்கியங்கள்.

நான் ஐந்து பணம் தந்தேன்
நீ ஒரு மனை கோலு
நீ நாலு மாடு வாங்கு
நீ அங்கே வந்து போ
நீ உன் நாக்கை வழி
நீ உன் பல்லைக் காட்டு
நீ ஆறு நாளில் வா
நீ ஒரு மாதம் போயிரு
நீ உன் நாக்கைக் காட்டு
நீ அவர் பெண்ணைக் கண்டாய்
நீ வந்த நாளை என்று
அவர் மெத்தை மேலே போவார்
நீ எங்கள் வீட்டைப் பார்
அது ஏன் அங்கே போச்சு
நீ அதில் வைத்து வை
நீ அந்தத் தேரை ஓட்டு
நீ ஏன் அங்கே வந்தாய்
அவன் ஒரு கெட்ட பிள்ளை
அவள் மூன்று காசு தந்தாள்
நீ சுவர் மேலே ஏறு
நீ இதின் மேலே இரு
நீர் எந்த வழி வந்தீர்
நீ ஒரு யுக்தி பண்ணு
நீ ஏன் பொய் சொன்னாய்
நாம் நமது ஊருக்குப் போவோம்
நீர் உமது காலைப் பாரும்
நான் ஒரு காசு தந்தேன்
அதை அவன் கையிற் கொடு
நான் அதை என்ன செய்ய
அவர் இதை நன்றாய்ப் பார்த்தார்

நீ அதை நன்றாய்ப் படி
அவர் பின்னால் நீர் போம்
உன்னை அவர் என்ன செய்வார்
இராமா அங்கே போயிரு
நீ அவன் கையிற் கொடு
நீ ஒரு வாழை வை
நீ நேற்று வந்தாய் செய்தாய்
நாம் தெற்கே போக வேண்டும்

நாற்சொல் வாக்கியங்கள் முற்றிற்று.

ஐஞ்சொல் வாக்கியங்கள்.

அவர் அதைப்பற்றி எனைக் கேட்டார்
நீ அங்கே என் வரவில்லை
நீ அதை உனது கண்ணாலே பார்
நான் இதை அவர் கையில் கொண்டேன்
உனது தாய்சொல்லைக் கவனமாய்க் கேள்
நீ பிறரது புத்தியைக் கேட்க வேண்டாம்
நான் நேற்று உம் மண்டை வந்தேன்
அவர் நீதி பற்றிச் சிலது சொன்னார்
கந்தன் உனை நேற்று என்ன கேட்டான்
நீ வீணாய்க் காலம் போக்க வேண்டாம்
நீ உனது பாடத்தைக் கவனமாய்ப்படி
அரங்கனிடம் உனது பாடத்தை ஒப்பி
நீ ஐயரண்டை என் போனாய்
நீ என் நேற்று வரவில்லை
நீ என்னைப் பார்த்து என்ன சொன்னாய்
நீ அதை நன்றாய் உற்றுப் பார்
நீ இனி மெத்தப் பேச வேண்டாம்
இனி இதை விட்டு அங்கே போ
நீ என் முன்னே ஓடி வந்தாய்

கடவுள் துணை

ஔவையார் அருளிச்செய்த

ஆத்திசூடி மூலம்.

காப்பு.

ஆத்தி சூடி யமர்ந்த தேவனை
ஏத்தி யேத்தித் தொழுவோ மியாமே.

அறஞ்செய விரும்பு
ஆறுவது சினம்
இயல்வது கரவேல்
ஈவது விலக்கேல்
உடையது விளம்பேல்
ஊக்கமது கைவிடேல்
எண்ணெழுத் திகழேல்
ஏற்ப திகழ்ச்சி
ஐய மிட்டுண்
ஒப்புர வொழுகு
ஓதுவதொழியேல்
ஔவியம் பேசேல்
அஃகஞ் சுருக்கேல்
கண்டொன்று சொல்லேல்
ஙப்போல் வளை
சனிநீ ராடு
ஞயம்பட வுரை
இடம்பட வீடிடேல்
இணக்கமறிந் திணங்கு
தந்தைதாய்ப் பேண்
நன்றி மறவேல்
பருவத்தே பயிர்செய்
மண்பறித் துண்ணேல்

இயல்பலா தனசெயேல்
அரவ மாட்டேல்
கெடுப்ப தொழி
கேள்வி முயல்
கைவினை கரவேல்
கொள்ளை விரும்பேல்
கோதாட் டொழி
சக்கர நெறிநில்
சான்றோ ரினத்திரு
சித்திரம் பேசேல்
சீர்மை மறவேல்
சுளிக்கச் சொல்லேல்
சூது விரும்பேல்
செய்வன திருந்தச்செய்
சேரிட மறிந்துசேர்
இலவம்பஞ்சிற் றுயில்
வஞ்சகம் பேசேல்
அழகலா தனசெயேல்
இளமையிற் கல்
அரனை மறவேல்
அனந்த லாடேல்
கடிவது மற
காப்பது விரதம்

கிழமைப் படவாழ்
கீழ்மை யகற்று
குணமது கைவிடேல்
கூடிப் பிரியேல்
சையெனத் திரியேல்
சொற்சோர்வுபடேல்
சோம்பித் திரியேல்
தக்கோ னெனத்திரி
தானமது விரும்பு
திருமாலுக் கடிமைசெய்
தீவினை யகற்று
துன்பத்திற் கிடங்கொடேல்
தூக்கி வினைசெய்
தெய்வ மிகழேல்
தேசத்தோ டொத்துவாழ்
தையல்சொற் கேளேல்
தொன்மை மறவேல்
தோற்பன தொடரேல்
நன்மை கடைப்பிடி
நாடொப் பனசெய்
நிலையிற் பிரியேல்
நீர்விளை யாடேல்
நுண்மை நுகரேல்
நூல்பல கல்
நெற்பயிர் விளை
நேர்பட வொழுகு
நைவினை நணுகேல்
நொய்ய வுரையேல்
நோய்க் கிடங்கொடேல்
பழிப்பன பகரேல்
பாம்பொடு பழகேல்
பிழைபடச் சொல்லேல்
பீடுபெற நில்
புகழ்ந்தாரைப் போற்றிவாழ்
பூமிதிருத்தியுண்
பெரியாரைத் துணைக்கொள்
பேதைமை யகற்று
பையலோ டிணங்கேல்
பொருடனைப் போற்றிவாழ்
போர்த்தொழில் புரியேல்
மனந்தடு மாறேல்
மாற்றானுக் கிடங்கொடேல்
மிகைபடச் சொல்லேல்
மீதூண் விரும்பேல்
முனைமுகத்து நில்லேல்
மூர்க்கரோ டிணங்கேல்
மெல்லியா டோள்சேர்
மேன்மக்கள் சொற்கேள்
மைவிழியார் மனையகல்
மொழிவ தறமொழி
மோகத்தை முனி
வல்லமை பேசேல்
வாதுமுற் கூறேல்
வித்தை விரும்பு
வீடு பெறநில்
உத்தமனாயிரு
ஊருடன் கூடிவாழ்
வெட்டெனப் பேசேல்
வேண்டி வினைசெயேல்
வைகறைத் துயிலெழு
ஒன்னாரைச் சேரேல
ஓரஞ் சொல்லேல்.

ஔவையார் அருளிச்செய்த நீதிச்சொல் முற்றிற்று.

உ

ஔவையார் அருளிச்செய்த

கொன்றைவேந்தன் மூலம்.

காப்பு.

கொன்றை வேந்தன் செல்வனடியிணை
என்று மேத்தித் தொழுவோ மியாமே.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆலயந் தொழுவது சாலவு நன்று
இல்லற மல்லது நல்லற மன்று.
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்
உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு
ஊருடன் பகைக்கின் வேருடன்கெடும்
எண்ணுமெழுத்துங் கண்ணெனத் தகும்
ஏவா மக்கண் மூவா மருந்து
ஐயம் புகினுஞ் செய்வன செய்
ஒருவனைப்பற்றி யோரகத் திரு
ஓதலி னன்றே வேதியர்க் கொழுக்கம்
ஔவியம் பேசுத லாக்கத்திற்கழிவு
அஃகமுங் காசுஞ் சிக்கெனத்தேடு
கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை
காவ லானே பாவையர்க் கழகு
கிட்டா தாயின் வெட்டென மற
கீழோ ராயினும் தாழ வுரை
குற்றம்பார்க்கிற் சுற்றமில்லை
கூரம் பாயினும் வீரியம் பேசேல்
கெடுவது செய்யின் விடுவது கருமம்
கேட்டி லுறுதி கூட்டு முடைமை
கைப்பொரு டன்னின் மெய்ப்பொருள் கல்வி
கொற்றவ னறித லுற்றிடத் துதவி
கோட்செவிக் குறளைக் காற்றுட னெருப்பு
கௌவைச் சொல்லி னெவ்வருக்கும் பகை
சந்ததிக் கழகு வந்திசெயாமை

சான்றோ ரென்கை யீன்றோர்க் கழகு
சிவத்தைப் பேணிற் றவத்திற் கழகு
சீரைத் தேடி னேரைத் தேடு
சுற்றத்திற் கழகு சூழ விருத்தல்
சூதும் வாதும் வேதனை செய்யும்
செய்தவ மறந்தாற் கைதவ மாளும்
சேமம் புகினுஞ் சாமத் துறங்கு
சையொத் திருந்தா லைய மிட்டுண்
சொக்க ரென்பவ ரத்தம் பெறுவர்
சோம்பரென்பவர் தேம்பித் திரிவர்
தந்தைசொல் மிக்க மந்திரமில்லை
தாய்சொற் றுறந்தால் வாசகமில்லை
திரைகடலோடியுந் திரவியந் தேடு
தீராக் கோபம் போராய்முடியும்
துடியாய்ப் பெண்டிர் மடியினெருப்பு
தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்
தெய்வஞ் சீறின் கைதவ மாளும்
தேடா தழிக்கிற் பாடாய் முடியும்
தொழுதூண் சுவையி னுழுதூ ணினிது
தோழ னோடு மேழமை பேசேல்
நல்லிணக்க மல்ல தல்லற் படுத்தும்
நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை
நிற்கக் கற்றல் சொற்றிறம் பாமை
நீரகம் பொருந்திய வூரகத் திரு
நுண்ணிய கருமமு மெண்ணித் துணி
நூன்முறை தெரிந்து சீலத்தொழுகு
நெஞ்சை யொளித்தொரு வஞ்சகமில்லை
நேரா நோன்பு சீரா காது
நைபவ ரெனினு நொய்யவுரையேல்
நொய்யவ ரென்பவர் வெய்யவ ராவர்
நோன் பென்பது கொன்றுதின் னாமை
பண்ணிய பயிரிற் புண்ணியந் தெரியும்

பாலோ டாயினும் கால மறிந்துண்
பிறன்மனை புகாமை யறமெனத் தகும்
பீரம் பேணிப் பாரந் தாங்கும்
புலையுங் கொலையுங் களவுந் தவிர்
பூரியோர்க் கில்லை சீரிய வொழுக்கம்
பெற்றோர்க் கில்லை சுற்றமுஞ் சினமும்
பேதமை யென்பது மாதர்க் கணிகலம்
பையச் சென்றால் வையந் தாங்கும்
பொல்லாங் கென்பவை யெல்லாந் தவிர்
போனக மென்பது தானுழந் துண்டல்
மருந்தே யாயினும் விருந்தோ டுண்
மாரி யல்லது காரியமில்லை
மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை
மீகாம னில்லா மரக்கல மோடாது
முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்
மூத்தோர் சொல் வார்த்தை யமிர்தம்
மெத்தெனப் படுத்தல் நித்திரைக் கழகு
மேழிச் செல்வங் கோழை படாது
மைவிழி யாடனைக் கையகன் றொழுகு
மொழிவது மறுக்கி னழிவது கருமம்
மோன மென்பது ஞான வரம்பு
வளவ னாயினு மளவறிந் தழித்துண்
வானஞ் சுருங்கிற் றானஞ் சுருங்கும்
விருந்திலோர்க் கில்லை பொருந்திய ஒழுக்கம்
வீரன் கேண்மை கூரம் பாகும்
உரவோ ரென்கை யிரவா திருத்தல்
ஊக்க முடைமை ஆக்கத் திற் கழகு
வெள்ளைக்கில்லை கள்ளச் சிந்தை
வேந்தன் சீறி னாந்துணை யில்லை
வையந் தோறும் தெய்வந் தொழு
ஒத்த விடத்து நித்திரை கொள்
ஓதாதார்க் கில்லை யுணர்வொடு வொழுக்கம்

ஔவையார் அருளிச்செய்த கொன்றைவேந்தன் முற்றிற்று

உ

கணபதி துணை.

முக்கிய நீதிக் கற்பனைகள்.

கணபதி துதி.

நீதிக்கற் பனைகளை நெறியாய்ப் படிக்க
ஆதி விநாயக னடியிணை காப்பு.

அல்லும் பகலும் ஆண்டவனைத் தொழு
ஆசான் சொன்ன சொல்லைக் கேளு
இரப்பவர் தங்கட் கியன்றவரை யிற்கொடு
ஈனர் தங்களை இகழ்ச்சி செய்யாதே
உண்மையைப் பேசி உத்தமனாய் நட
ஊரா ருடனே ஒருநாளும் பகையாதே
எல்லா விஷயமும் எண்ணித் துணி
ஏதேனும் பொய்ச்சாட்சி சொல்லாதே
ஐய மிட்டு அருந்துத லழகு
ஒருவர் பேரிலும் கோள் கூறாதே
ஓதிவைத் தவரை ஒருநாளும் மறவாதே
ஔவை நூலை செவ்வையாய்ப் படி
கற்றவர் தங்களைக் கண்டு பணிந்திடு
சன்மார்க்க ருடனே சகவாசஞ்செய்
ஞயம்பட வுரைத்து நல்லவனாயிரு
டம்பமாய்த் திரிந்து சங்கடப்படாதே
தருமமே தலையினைக் காக்கு மென்றறி
நன்றிசெய் தோரை என்று மறவாதே
பகைவர் தங்களை உறவு கொள்ளாதே
மந்திர மென்பது தந்தைசொல் என்றறி
யமதண் டனைக்கு அஞ்சி நடந்திடு
ரட்சித் தோரிடம் பட்சமா யிரு

வஞ்சனை செய்து வாழ நினையாதே
அன்னை சொன்ன சொல்லைக் கேளு
கல்விப் பொருளே செல்வ மென்றறி
காலை மாலை நூலை வாசி
கிஞ்சித் தேனும் பொய் சொல்லாதே
கீதம் பாடி நாதனைத் துதி
குணவானென்று குவலயத் திருந்திடு
கூனர் குருடரை குறும்பு செய்யாதே
கெட்ட செய்கையை விட்டு ஒழி
கேடுசெய் பவருடன் கிட்ட நில்லாதே
கைத் தொழில் வித்தையைக் கற்றுக்கொள்ளு
கொடுத்த பொருளை இல்லையென்னாதே
கோயி லில்லா ஊரி லிராதே
கௌதமர் போன்ற கண்யரை வழிபடு.

முக்கிய நீதிக் கற்பனைகள் முற்றிற்று.

எல்லா வற்றிற்கும் ஈசனுண் டென்று
பொல்லாங் கெனபவை எல்லாந் தவிர்த்து
நல்லோ னென்னும் நற்பெயர் பூண்டு
இல்லற வாசியா யிரப்போர்க் கீந்து வாழ்

ஆனைமுகன் ஆறுமுகன்
அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு.

உ

கணபதி துணை.

ஒளவையார் அருளிச்செய்த
வாசகபாடங்கள்.

1. அப்பா சிதம்பரம் நீ ஈ, பாச்சி, வண்டு, ஓணான், எலி, பல்லி, முதலான ஜீவவதை செய்யவேண்டாம் ஏனென்றால், உன் கையில் காயப்பட்டால் என்னமாய் நோகும் என்பதை யோசித்துப்பார்.

2. ஒரு நாள் கந்தன் கடா மாட்டின் மேலே எறிச் சவாரி விட்டான். அது துள்ளி யோட, அவன் கீழே விழுந்தான். அதனால் அவனுடைய பற்களெல்லாம் விழுந்து அவனுக்கு அதிக காயம்பட்டதால் மெத்த வருத்தப்பட்டான். ஆகையால் நீ எந்தமாட்டின்மேலும் எறவேண்டாம்.

3. ஒரு மட்டிப் பையன் ஒரு நண்டு வளையைப் பார்த்து அதில் அவன் கையை விட்டான். அதில் ஒரு நாகம் அந்தப் பையன் கையில் தீண்ட அதின் விஷம் அவன் தலை மண்டையிலேற அந்தப் பையன் செத்தான். ஆகையால் அப்பா நீ இனி ஒரு வளையைக் கண்டால் அதில் உன் கையை விடவேண்டாம். விளையாட்டுக்காகக் கையிட்டால் சிலவேளை அது வினையாய் வந்துமுடியும்.

4. அப்பாசாமி உன் பற்கள் சாம்பலைக்கொண்டு உன்னால் தேய்க்கப்பட வேண்டாம். அப்படித் தேய்க்கப்பட்டால் உன் பற்கள் தேய்ந்துவிடுகிறதால், நீ ஒன்றும் மெல்ல மாட்டாய். உன்பற்கள் அந்தங்கெட்டுப் போம். ஆதலால் ஆலின் கொம்பு வேலின் கொம்பு கொண்டு உன் பற்கள் தேய்க்கப்பட்டால் மிகு நன்மை.

5. ஒரு நீளக்கொம்புளமாடு ஒரு எரியண்டை புல்மேர்ந்தது, அதை முத்தையன் பார்த்து ஒரு கொம்பால் குத்தப் போனான். அது ஓடிவந்து முத்தனைப் பாய, அவன் கையில் கொஞ்சம் காயம் பட்டது. அப்பா நாம் மாட்டுக் கிட்டப்போய்த் தொந்தரை செய்தால் அது நம்மைப் பாயும்.

வாசகப் பாடங்கள் முற்றிற்று.

வேடிக்கைக் கதைகள்.

---

1. காசியில் ஒரு வித்வான் வாசஞ்செய்திருந்தான். அவனுக்கு இரண்டு பிள்ளைகளுண்டு. அவ்விருவரில் மூத்தவனுக்குத் தன் ஆஸ்தியெல்லாங் கொடுத்துவிட்டு, இளையவனுக்குக் கல்வி சாஸ்திரங்களைக் கற்பித்தான். மூத்தவன் சிலநாளில் தன் பணத்தையெல்லாஞ் செலவழித்து ஏழையானான். இளையவனோ, தன் சாமர்த்தியத்தினால் மிகுந்த திரவியத்தைச் சம்பாதித்துச் சுகமாக வாழ்ந்திருந்தான். ஆதலால் கல்வியைக் கற்றுக்கொண்டவன் சுகப்படுவான்.

2. ஒரு தேள் நெருப்பில் விழுவதை ஒருவன் பார்த்து அதனைக் காப்பாற்றுகிறதே தருமமென்று யோசனைசெய்து அதனை விழவொட்டாமல் காப்பாற்றினான். ஆனால் அத்தேள் அவன் செய்த உபகாரத்தை மறந்து அவன் கையைக் கொட்டி மிகவும் நோயை உண்டாக்கிற்று. ஆதலால் துன்மார்க்கருக்கு நாமெப்படி உபகாரஞ் செய்கிறதென்று எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்.

வேடிக்கைக் கதைகள் முற்றிற்று.

உ

கணபதி துணை.

உலக நீதி.

உலகநீதிபுராணத்தை யுரைக்கவே
கலைகளாய்வருங் கரிமுகன்காப்பு

ஓதாமலொருநாளு மிருக்கவேண்டாம்
ஒருவரையும்பொல்லாங்கு சொல்லவேண்டாம்
மாதாவையொருநாளு மறக்கவேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோ டிணங்கவேண்டாம்
போகாதவிடந்தனிலே போகவேண்டாம்
போகவிட்டுப்புறஞ்சொல்லித் திரியவேண்டாம்
வாதாடுங்குறவரிட வள்ளிபங்கன்
மயிலேறும்பெருமானை வாழ்த்தாய்நெஞ்சே. (1)

நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்
நிலையில்லாக்காரியத்தை நிறுத்தவேண்டாம்
நஞ்சுடனேயொருநாளும் பழகவேண்டாம்
நல்லிணக்கமில்லாரோ டிணங்கவேண்டாம்
அஞ்சாமற்றனிவழியே போகவேண்டாம்
அடுத்தவரையொருநாளுங் கெடுக்கவேண்டாம்
மஞ்சாருங்குறவரிட வள்ளிபங்கன்
மயிலேறும்பெருமானை வாழ்த்தாய்நெஞ்சே. (2)

மனம்போனபோக்கெல்லாம் போகவேண்டாம்
மாற்றானையுறவென்று நம்பவேண்டாம்
தனந்தேடியுண்ணாமற் புதைக்கவேண்டாம்
தருமத்தையொருநாளு மறக்கவேண்டாம்
சினந்தேடியல்லலையுந் தேடவேண்டாம்
சினந்திருந்தார்வாசல்வழி சேரவேண்டாம்
வனந்தேடுங்குறவரிட வள்ளிபங்கன்
மயிலேறும்பெருமானை வாழ்த்தாய்நெஞ்சே. (3)

குற்றமொன்றும் பாராட்டித் திரியவேண்டாம்
கொலைகளவுசெய்வாரோ டிணங்கவேண்டாம்
கற்றவரையொருநாளும் பழிக்கவேண்டாம்
கற்புடையமங்கையரைக் கருதவேண்டாம்
கொற்றவனோடெதிர்மாறு பேசவேண்டாம்
கோயிலில்லாவூரில் குடியிருக்கவேண்டாம்
மற்றுநிகரொவ்வாத வள்ளிபங்கன்
மயிலேறும்பெருமானை வாழ்த்தாய்நெஞ்சே. (4)
வாழாமற்பெண்ணைவைத்துத் திரியவேண்டாம்
மனையாளைக்குற்றமொன்றுஞ் சொல்லவேண்டாம்
வீழாதபடுகுழியில் வீழவேண்டாம்
வெஞ்சமரிற்புறங்கொடுத்து மீளவேண்டாம்
தாழ்வானகுலத்துடனே சேரவேண்டாம்
தாழ்ந்தவரைப்பொல்லாங்கு சொல்லவேண்டாம்
வாழ்வாருங்குறவரிட வள்ளிபங்கன்
மயிலேறும்பெருமானை வாழ்த்தாய்நெஞ்சே. (5)
வார்த்தைசொல்வார்வாய்பார்த்துத் திரியவேண்டாம்
மதியாதார்தலைவாசல் மிதிக்கவேண்டாம்
மூத்தோர்சொல்வார்த்தைதனை மறக்கவேண்டாம்
முன்கோபக்காரரோ டிணங்கவேண்டாம்
வாத்தியார்கூலியைவைத் திருக்கவேண்டாம்
வழிபறித்துத்திரிவாரோ டிணங்கவேண்டாம்
சேர்த்தபுகழாளனொரு வள்ளிபங்கன்
திருக்கைவேலாயுதனைச் செப்பாய்நெஞ்சே. (6)
கருதாமற்கருமங்கள் முடிக்கவேண்டாம்
கணக்கழிவையொருநாளும் பேசவேண்டாம்
பொருவார்தம்போர்க்களத்தில் போகவேண்டாம்
பொதுநிலத்திலொருநாளு மிருக்கவேண்டாம்
இருதாரமொருநாளுந் தேடவேண்டாம்
எளியாரையெதிரிட்டுக் கொள்ளவேண்டாம்
குருகாரும்புனங்காக்கும் ஏழைபங்கன்
குமரவேல்பாதத்தைக் கூறாய்நெஞ்சே. (7)

சேராதவிடந்தனிலே சேரவேண்டாம்
செய்தநன்றியொருநாளு மறக்கவேண்டாம்
ஊரோடுங்குண்டுணியாய்த் திரியவேண்டாம்
உற்றாரையுதாசினங்கள் சொல்லவேண்டாம்
பேரானகாரியத்தைத் தவிர்க்கவேண்டாம்
பிணைபட்டுத்துணைபோய்நீ திரியவேண்டாம்
வாதாடுங்குறவரிட வள்ளிபங்கன்
மயிலேறும்பெருமாளை வாழ்த்தாய்நெஞ்சே. (8)

மண்ணினின்றுபெண்ணோரஞ் சொல்லவேண்டாம்
மனஞ்சலித்துத்திடுக்கிட்டுத் திரியவேண்டாம்
கண்ணழிவுசெய்துதுயர் காட்டவேண்டாம்
காணாதவார்த்தைகளைக் கட்டுரைக்கவேண்டாம்
புண்படவேவார்த்தைகளைச் சொல்லவேண்டாம்
புறஞ்சொல்லித்திரிவாரோ டிணங்கவேண்டாம்
மண்ணளந்தார்மருமகனார் மைந்தனெங்கோன்
மயிலேறும்பெருமாளை வாழ்த்தாய்நெஞ்சே. (9)

மறம்பேசித்திரிவாரோ டிணங்கவேண்டாம்
வாதாடிவழக்குரைத்துச் சொல்லவேண்டாம்
திறம்பேசிக்கலகமிட்டுத் திரியவேண்டாம்
தெய்வத்தையொருநாளும் மறக்கவேண்டாம்
இறந்தாலும்பொய்தன்னைச் சொல்லவேண்டாம்
ஏசலிட்டவுற்றாரை நத்தவேண்டாம்
குறந்தனிலேவாழ்கின்ற வள்ளிபங்கன்
குமரவேல்நாமத்தைக் கூறாய்நெஞ்சே. (10)

ஆதரித்துப்பலவகையாப் பொருளுந்தேடி
அருந்தமிழாலறுமுகனைப் பாடவேண்டி
ஓதுவித்தவாசகத்தால் உலகம்உய்ய
உண்மையாய்ப்பாடிவைத்த உலகநீதி
காதலித்துக்கற்றோரும் கேட்டபேரும்
கருத்துடனேநாள்தோறும் களிப்பினோடு
போதமுற்றுமிகவாழ்ந்து பொருளுந்தேடி
பூலோகமுள்ளளவும் வாழ்வார்தாமே. (11)

உலகநீதி முற்றிற்று.